செ.வெ.எண்:35 நாள்: 22.01.2019

# அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறை சார்பாக வேளாண் திருவிழாவை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியம், சோழமாதேவி கிராமத்தில் வேளாண்மைத்துறையின் சார்பாக வேளாண் திருவிழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி,இஆப.,** அவர்கள் தலைமையில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் குத்துவிளக்கேற்றி, தொடங்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில் அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது :-**

வேளாண்மைத்துறை சார்பாக நடைபெறும் இவ்வேளாண் திருவிழாவில் கலந்துகொள்வதில் மிக மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், நான் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்து, சிறு வயதில் இருந்து விவசாயத்தை பற்றி நன்கு அறிந்து, விவசாயம் செய்து வந்தேன். அனைத்து விவசாய பெருமக்கள் அனைவரும் வேளாண் துறை சார்பாக அளிக்கும் பயன்களை அறிந்து விவசாயத்தில் நல்ல லாபம் பெறும் வகையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் முதல்வர் மாண்புமிகு திரு.எடப்பாடிகே.பழனிச்சாமி அவர்களின் அரசு, விவசாயிகளின் உற்பத்தியை இரண்டு மடங்காக்கவும் வருமானத்தை மும்மடங்கு ஆக்கவும் பல்வேறு தொழில்நுட்பங்கள் மற்றும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

நமது இந்திய நாடு வேளாண்மை தொழிலை முதன்மையாக கொண்ட நாடாகும். வளர்ந்து வரும் மக்கள் தொகைகேற்ப உணவு உற்பத்தியில் பெருக்க வேண்டிய கட்டாயம் நம்மிடையே உள்ளது. தற்போது பெருகி வருகின்ற மக்கள் தொகைகேற்ப தேவையான அளவில் நஞ்சில்லா தரமான உணவு அனைவருக்கும் கிடைத்திட வேளாண் துறை பல்வேறு தொழில்நுட்பங்களையும் மற்றும் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்க இந்த வேளாண் திருவிழா நிகழ்ச்சியை கிரீடு வேளாண் அறிவியல் மையம் மற்றும் வேளாண்மை துறை இணைந்து நடத்தி வருகின்றது. தமிழக அரசு உணவு தானிய உற்பத்தியை பெருக்கிட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியதன் விளைவாக கடந்த மூன்று ஆண்டுகளாக கிரிஷி கர்மன் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை மத்திய அரசிடம் இருந்து வேளாண்மை துறை பெற்றுள்ளது. இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி 148 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.

அரியலூர் மாவட்ட விவசாயிகளுக்கு பல புதிய தொழில்நுட்பங்களையும் மற்றும் திட்டங்களையும் வேளாண்மை சார்ந்த துறைகளும் விவசாயிகளுக்கு கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்காற்றுகிறது. குறிப்பாக விவசாயிகளுக்கு பல்வேறு பணிகளான செயல் விளக்கங்கள், பயிற்சிகள், கள ஆராய்ச்சிகள், மற்றும் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி வருகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்தி மகசூலை அதிகரிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் பயிர் சாகுபடியோடு கால்நடை பராமரிப்பு, மீன் வளர்ப்பு, காளான் வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, மண்புழு உரம் தயாரிப்பு மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற வேளாண் சார்ந்த தொழில்களை ஒருங்கிணைந்து கடைபிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இதனை விவசாய பெருமக்கள் அனைவரும் பயன்படுத்தி, பயன்பெறுமாறு மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக, விவசாய உபயோகப்பொருட்கள் அடங்கி கண்காட்சியினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி,இஆப.,** அவர்கள் பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில், வேளாண்மை துணை இயக்குநர் பழனிசாமி, தோட்டக்கலைத்துணை இயக்குநர் அன்புராஜன், திருச்சி ஆவின் துணைப்பெருந்தலைவர் பிச்சமுத்து, தொழில் நுட்ப வள்ளுநர்கள், அட்மா ஆலோசனை குழு உறுப்பினர்கள் மற்றும் விவசாய பெருமக்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**